நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

# அலுவலகக் கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக் கோரல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மேல் மாகாண பயிற்சி நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக மத்துகம அலுவலகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சுமார் 7500 சதுர அடி இடவசதிகளைக் கொண்ட பயிற்சி நிலையமொன்றுக்கு பொருத்தமான கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கட்டிடம் சம்பந்தமாக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

**விரிவுரை மண்டபம்**

- ஒரு கற்கை நெறியின் பொருட்டு சுமார் 45 பயிலுநர்கள் வரையில் கலந்துகொள்ளக்கூடிய 10 வகுப்பறைகள் சகிதமான கட்டிடமாகவிருத்தல் வேண்டும்.

**அலுவலக இடப்பரப்பு**

- பணியாட் தொகுதியினருக்கு சுமார் 500 சதுர அடி பரப்பளவான மண்டப இடவசதியிருத்தல் வேண்டும்.
- பயிற்சி உபகரணங்களை வைத்துக்கொள்வதற்கு (Lab) 400 சதுர அடி பரப்பளவான 05 அறைகள் இருத்தல் வேண்டும்.
- பாதுகாப்பு கூடாரமொன்றை நிர்மாணிப்பதற்காக அலுவலகப் பிரதேசத்தினுள் படலைக்கு அருகில் இடவசதி இருத்தல் வேண்டும்.
- பயிற்சி நிலையத்தைச் சுற்றி படலை சகிதம் மதில் இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் நாளாந்தம் 10 - 15 வாகனங்கள் வரையில் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதி இருத்தல் வேண்டும்.
- பணியாட்தொகுதியினர் மற்றும் வெளியாட்கள் பாவிப்பதற்காக சுமார் 06 மலசலகூடங்கள் வரையில் வெவ்வேறாக இருத்தல் வேண்டும்.
- சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகை தரும் சுமார் 30 சேவை பெறுநர்கள் அமர்ந்து தமது கடமை சேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான இடவசதி கட்டிடத்தினுள் இருத்தல் வேண்டும்.
- நேரடி நீர்க் குழாய் இணைப்புகளுடன் வேறான நீர் மானி இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டிடத்தில் 2000 லீற்றர் அளவு சேமித்து வைக்கக் கூடிய நீர்தாங்கி/ தாங்கிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- கட்டிடம் பொது போக்குவரத்து வசதிகளை பாவித்து இலகுவாக அடையக் கூடிய வர்த்தக மயமான பிரதேசத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- மூன்று சுற்று மின் வழங்கலுடன் வேறாக மின் மானி இருத்தல் வேண்டும். மின்சாரம் தடைப்படும் வேளையில் பாவிப்பதற்கு மின் பிறப்பாக்கி இயந்திரம் இருப்பது மேலதிக தகைமையாகும்
- நிலையான தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
- பிரதான மின் விநியோக பலகையுடன் (Main Switchboard) அடிப்படை மின் கட்டுப்பாட்டு அமைப்பு மின் விசிறிகள் மற்றும் ஏனைய துணைப்பாகங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- இடத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டதாக அறிவித்த பின்னர் கட்டிடம் முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டு 02 வாரங்களுக்குள் வழங்கக்கூடிய இயலுமை இருத்தல் வேண்டும்.
- கழிவு நீர் மற்றும் மலக்கழிவுகளை அகற்றும் முறைமைகள் முறையாகத் தயார் செய்யப்பட்ட கட்டிடமாக இருத்தல் வேண்டும். பயிற்சி நிலையமாக செயற்படுவதால் கழிவுநீர் முறைமையின் அளவு தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படும்.
- அறைகளை வேறாக்குதல் பணியகத்தின் தேவையின் பிரகாரம் இடம் பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- அவசர வேளைகளில் கட்டிடத்திலிருந்து வெளியேறுவதற்காக முறையொன்று மற்றும் கதவு இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்தை நடத்திச் செல்வதனால் குறித்த கட்டிடம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அருகில் வசிப்பவர்களுக்கு எந்த தொந்தரவும் அற்ற இடமாக இருத்தல் வேண்டும்.
- மல்டிமீடியா வசதிகள், ஒலிபெருக்கி இயந்திரங்களைப் பயன்படுத்தும் வசதிகள் இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தினுள் தீயணைப்பு முறைமையொன்று நிறுவப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவசர அனர்த்த வேளைகளில் தீயணைப்பு வாகனம் மற்றும் மீட்புக் குழுவினர் இலகுவாக அடையக்கூடிய இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
- அதிகாரிகள் தங்குமிட வசதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வேறாக்கப்பட்ட இரண்டு அறைகள் அல்லது பல அறைகள் மலசலகூட வசதிகளுடன் கட்டிடத்தினுள் அமைந்திருத்தல் மற்றும் அதன்பொருட்டு வேறான நுழைவாயில் இருத்தல் வேண்டும் மற்றும் இந்த வளவினுள் இதற்கான கட்டிடமொன்று அமைந்திருத்தல் மேலதிக தகைமையாகும்.
- குத்தகை வழங்குநரால் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த வாடகை தொகை அரச மதிப்பீட்டு அறிக்கைக்கு உட்பட்டு கொடுப்பனவுகள் இடம் பெறும் (குறைந்தபட்ச தொகை).

**கட்டிட உரிமையாளரால் இங்கு குறிப்பிடப்படும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்**

01. விலைமனு பத்திரத்துடன் பணியகத்திற்கு வழங்கப்படும் கேள்வி ஆவணம்
02. மாதாந்த குத்தகைத் தொகை குறிப்பிடப்பட்ட கடிதம்
03. குத்தகைக்கு இயைபான ஆதனத்தின் நிலையான முகவரி
04. கட்டிட உரிமையாளர் உரிமைத்துவத்தைப் பெற்றுக் கொண்ட காணி உறுதியின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்று மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
05. சம்பந்தப்பட்ட ஆதனத்தின் வரைபடம்
06. சான்றுபடுத்திய அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம். (குறித்த கட்டிட வரைபடம் A4 அளவாக அல்லது A3 அளவாக சிறியதாக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட புகைப்படப் பிரதியாக இருத்தல் வேண்டும்)
07. குத்தகை வழங்குநரின் பெயர்/முகவரி/தேசிய அடையாள அட்டை இல மற்றும் அதன் தெளிவான புகைப்படப் பிரதி
08. கட்டிட உரிமையாளரின் தொலைபேசி இலக்கம்
09. இணக்கச் சான்றிதழ்
10. கடந்த 06 மாதத்திற்குள் மின்சாரம், தொலைபேசி, வரிக்கட்டணம் போன்றவற்றின் கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதிகள்
11. குத்தகைக்கு விடுவதற்கு எதிர்பார்க்கும் ஆதனம் தொடர்பில் உரிமைத்துவ அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அது பிரதேசத்தின் சட்டத்தரணியொருவரினால் தயாரிக்கப்பட்டு இறுதியில் அவரின் பரிந்துரை சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, இலக்கம் 234, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகத்தின் 2ஆம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024.11.26ஆம் திகதி பி.ப. 1.00 மணி அல்லது அதற்கு முன்பு உள்ளிடல் வேண்டும். உங்களது விண்ணப்பத்தை தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கட்டிடத்தை வாடகை அடிப்படையில்/குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல். PR/02/04-01(86)'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஏதேனும் விண்ணப்பமொன்றை நிராகரிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் உரிமையை பணியகத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். அரச மதிப்பீட்டாளரின் அறிக்கைகளுக்கு உட்பட்டு தெரிவுகள் இடம்பெறும். மீளளிக்கப்படாத 1000.00 ரூபா தொகையை தலைமை அலுவலகத்தின் காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகை முகாமையாளருக்குச் சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (பணம் செலுத்துவதற்கு நிறுவனக் கடிதத் தலைப்பில் செய்யப்பட்ட எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றுடன் வர வேண்டும்). விலைமனு ஆவணங்களை 2024-11-04ஆம் திகதி முதல் 2024-11-25ஆம் திகதி வரை அலுவலக நேரத்தினுள் (மு.ப. 9.00 - பி.ப. 3.00 மணிக்கிடையில்) பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி/தொலைநகல் 2880550/ 2887585**
**இணையதளம்: www.slbfe.lk**

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்.**